**செ.வெ. எண்: 359** **நாள்: 21.06.2012**

## செய்தி வெளியீடு

தீக்காயம், விபத்து போன்றவற்றால் பாதிக்கப்படும் மக்களுக்கு, உயர் சிகிச்சையை உடனடியாக அளித்து அவர்களின் உயிர்களை காக்கும் பொருட்டு இந்த அரசு, அரசு மருத்துவமனைகளை வலுப்படுத்தி வருகிறது. அரசு மருத்துவமனைகளில் தீக்காயத்தால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு நவீன சிகிச்சையை அளிக்கும் பொருட்டு, நவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடிய தீக்காயப்பிரிவு மற்றும் விபத்துப் பிரிவுகளை அமைத்து வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு தொழிற்சாலை மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகள் அதிகம் உள்ளதால் அங்குள்ள தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், சிவகாசி அரசு மருத்துவமனையில் நவீன வசதிகளுடன் கூடிய தீக்காயப்பிரிவை ஏற்படுத்த அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இந்த மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவு மற்றும் அறுவை சிகிச்சைக்குப் பின் கவனிக்கும் பிரிவுகளை ரூ.20.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தவும், இந்த தீக்காயப் பிரிவிற்கு ரூ.40.17 இலட்சம் செலவில் மருத்துவக் கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்கவும் மொத்தம் ரூ.60.17 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆண்டொன்றுக்கு ரூ.52.77 இலட்சம் செலவில், கூடுதலாக மூன்று மருத்துவர்கள், மூன்று செவிலியர்கள் மற்றும் ஆறு மருத்துவம் சார்ந்த மற்றும் மருத்துவம் சாராத பணியாளர் பணியிடங்கள் சிவகங்கை அரசு மருத்துவமனை தீக்காயப்பிரிவிற்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. விருதுநகர் மாவட்ட மக்கள், இந்த தீக்காயப் பிரிவில் நவீன சிகிச்சையை பெற இயலும்.

கிரிஜா வைத்தியநாதன்
அரசு முதன்மைச் செயலாளர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**